### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 2-3 - விற்பெரு விழவும்[1]
### (திருவல்லிக்கேணி)

1068 * விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் * வேழமும் பாகனும் வீழ *
செற்றவன் தன்னை புரமெரி செய்த * சிவனுறு துயர் களை தேவை **
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு * பார்த்தன் தன் தேர் முன் -
நின்றானை *
சிற்றவை பணியால் முடி துறந்தானைத் * திருவல்லிக்கேணிக்
கண்டேனே 1

1069 * வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை * விழுமிய முனிவர்கள் விழுங்கும் *
கோதில் இன் கனியை நந்தனார் களிற்றைக் * குவலயத்தோர் -
தொழுதேத்தும் **
ஆதியை அமுதை என்னை ஆளுடை அப்பனை * ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் * மாடமா மயிலைத் * திருவல்லிக்கேணிக்
கண்டேனே 2

1070 வஞ்சனை செய்யத் தாயுருவாகி * வந்த பேய் அலறி மண் சேர *
நஞ்சமர் முலையூடு உயிர் செக உண்ட * நாதனைத் தானவர் கூற்றை **
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் * வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி *
அஞ்சுவை அமுதம் அன்றளித்தானைத் * திருவல்லிக்கேணிக் -
கண்டேனே 3

1071 இந்திரனுக்கென்று ஆயர்கள் எடுத்த * எழில் விழவில் பழ நடை செய் *
மந்திர விதியில் பூசனை பெறாது * மழை பொழிந்திடத் தளர்ந்து ** ஆயர்
எந்தம்மோடு இன ஆனிரை தளராமல் * எம்பெருமான்! அருள் என்ன *
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் * திருவல்லிக்கேணிக் -
கண்டேனே 4

1072 இன்துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும் இன்பன் * நற்புவி தனக்கு -
இறைவன் *
தன்துணை ஆயர்பாவை நப்பின்னை தனக்கு இறை * மற்றையோர்க்கு எல்லாம்
வன்துணை ** பஞ்ச பாண்டவர்க்காகி வாயுரை தூது சென்று * இயங்கும்
என்துணை[2] * எந்தை தந்தை தம்மானைத் * திருவல்லிக்கேணிக் -
கண்டேனே 5

1073 அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கிளையவன் * அணியிழையைச் சென்று *
எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது * எம்பெருமான்! அருள் என்ன **

---
[1] இது கோவில் திருமொழி
[2] இன்துணை

சந்தமர்[3] குழலாள் அலக்கண் நூற்றுவர் தம் * பெண்டிரும் எய்தி நூல் -
இழப்ப *
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் * திருவல்லிக்கேணிக்
கண்டேனே 6

1074 * பரதனும் தம்பி சத்துருக்கனனும் * இலக்குமனோடு மைதிலியும் *
இரவும் நன்பகலும் துதி செய்ய நின்ற * இராவணாந்தகனை எம்மானை **
குரவமே கமழும் குளிர் பொழிலூடு * குயிலொடு மயில்கள் நின்றால *
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் * திருவல்லிக்கேணிக் -
கண்டேனே 7

1075 * பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் * வாயில் ஓராயிர நாமம் *
ஒள்ளியவாகிப் போத ஆங்கு அதனுக்கு * ஒன்றுமோர் பொறுப்பிலனாகி **
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் * பிறை எயிற்று அனல் -
விழிப் பேழ் வாய் *
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் * திருவல்லிக்கேணிக் கண்டேனே 8

1076 * மீனமர் பொய்கை நாள் மலர் கொய்வான் * வேட்கையினோடு -
சென்றிழிந்த *
கானமர் வேழம் கை எடுத்தலறக் * கரா அதன் காலினைக் கதுவ **
ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து * சென்று நின்று ஆழி தொட்டானை *
தேனமர் சோலை மாடமா மயிலைத் * திருவல்லிக்கேணிக் கண்டேனே 9

1077 * மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும் * மாட மாளிகையும் மண்டபமும் *
தென்னன் தொண்டையர் கோன் செய்த நல்மயிலைத் * திருவல்லிக்கேணி -
நின்றானை **
கன்னி நன்மாட மங்கையர் தலைவன் * காமரு சீர்க் கலி கன்றி *
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார் * சுகம் இனிதாள்வர் -
வானுலகே 10

**அடிவரவு:** வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன்
பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்

---

[3] சந்தமல்